ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 11.5 – மானமரும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 11.5 – மானமரும்

‡ மான் அமரும் மென் நோக்கி ⋆
வைதேவி இன் துணையா ⋆
கான் அமரும் கல் அதர் போய்க் ⋆
காடுறைந்தான் காண் ஏடீ ⋆
கான் அமரும் கல் அதர் போய்க் ⋆
காடுறைந்த பொன் அடிக்கள் ⋆
வானவர் தம் சென்னி ⋆
மலர் கண்டாய் சாழலே ‖ **11.5.1** ‖

தந்தை தளை கழலத் ⋆
தோன்றிப் போய் ⋆
ஆய்ப்பாடி நந்தன் குல மதலையாய் ⋆
வளர்ந்தான் காண் ஏடீ ⋆
நந்தன் குல மதலையாய் வளர்ந்தான் ⋆
நான்முகற்குத் தந்தை காண் ⋆
எந்தை பெருமான் காண் சாழலே ‖ **11.5.2** ‖

ஆழ் கடல் சூழ் வையகத்தார் ⋆
ஏசப் போய் ⋆
ஆய்ப்பாடித் தாழ் குழலார் வைத்த ⋆
தயிர் உண்டான் காண் ஏடீ ⋆
தாழ் குழலார் வைத்த ⋆
தயிர் உண்ட பொன் வயிறு ⋆

இவ்வேழ் உலகும் உண்டும் ⋆
இடம் உடைத்தால் சாழலே ॥ **11.5.3** ॥

அறியாதார்க்கு ⋆
ஆன் ஆயன் ஆகிப் போய் ⋆
ஆய்ப்பாடி உறி ஆர் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்தான் காண் ஏடீ ⋆
உறி ஆர் நறு வெண்ணெய் ⋆
உண்டுகந்த பொன் வயிற்றுக்கு ⋆
ஏறி நீர் உலகனைத்தும் ⋆
எய்தாதால் சாழலே ॥ **11.5.4** ॥

வண்ணக் கருங்குழல் ⋆
ஆய்ச்சியால் மொத்துண்டு ⋆
கண்ணிக் குறுங்கயிற்றால் ⋆
கட்டுண்டான் காண் ஏடீ ⋆
கண்ணிக் குறுங்கயிற்றால் ⋆
கட்டுண்டான் ஆகிலும் ⋆
எண்ணற்கரியன் ⋆
இமையோர்க்கும் சாழலே ॥ **11.5.5** ॥

கன்றப் பறை கறங்கக் ⋆
கண்டவர் தம் கண் களிப்ப ⋆
மன்றில் மரக்கால் ⋆
கூத்தாடினான் காண் ஏடீ ⋆
மன்றில் மரக்கால் ⋆
கூத்தாடினான் ஆகிலும் ⋆

என்றும் அரியன் ⋆
இமையோர்க்கும் சாழலே ॥ **11.5.6** ॥

கோதை வேல் ஐவர்க்காய் ⋆
மண் அகலம் கூறிடுவான் ⋆
தூதனாய் மன்னவனால் ⋆
சொல்லுண்டான் காண் ஏடீ ⋆
தூதனாய் மன்னவனால் ⋆
சொல்லுண்டான் ஆகிலும் ⋆
ஓத நீர் வையகம் ⋆
முன் உண்டுமிழ்ந்தான் சாழலே ॥ **11.5.7** ॥

பார் மன்னர் மங்கப் ⋆
படை தொட்டு வெஞ்சமத்து ⋆
தேர் மன்னர்க்காய் அன்று ⋆
தேர் ஊர்ந்தான் காண் ஏடீ ⋆
தேர் மன்னர்க்காய் அன்று ⋆
தேர் ஊர்ந்தான் ஆகிலும் ⋆
தார் மன்னர் தங்கள் ⋆
தலை மேலான் சாழலே ॥ **11.5.8** ॥

கண்டார் இரங்கக் ⋆
கழியக் குறள் உருவாய் ⋆
வண் தாரான் வேள்வியில் ⋆
மண் இரந்தான் காண் ஏடீ ⋆
வண் தாரான் வேள்வியில் ⋆
மண் இரந்தான் ஆகிலும் ⋆

விண்டேழ் உலகுக்கும் ⋆
மிக்கான் காண் சாழலே ॥ **11.5.9** ॥

‡ கள்ளத்தால் மாவலியை ⋆
மூவடி மண் கொண்டளந்தான் ⋆
வெள்ளத்தான் வேங்கடத்தான் ⋆
என்பரால் காண் ஏடீ ⋆
வெள்ளத்தான் ⋆
வேங்கடத்தானேலும் ⋆
கலிகன்றி உள்ளத்தின் உள்ளே ⋆
உளன் கண்டாய் சாழலே ॥ **11.5.10** ॥

அடிவரவு — மான் தந்தை ஆழ்கடல் அறியாதார்க்கு வண்ணம் கன்ற கோதை பார்மன்னர் கண்டார் கள்ளத்தால் மைந்நின்ற

மானமரும் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்